வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.1982/அ1/2023 நாள்.10.05.2023

| | |
|---|---|
| பொருள் | நிருவாகம் – பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் – உதவியாளர் / இளநிலை உதவியாளர் – பள்ளி வேலை நேரத்திற்கு தகுந்தாற்போல் பணிநேரத்தை காலை 09.00 மணி முதல் 04.45 மணி வரை மாற்றியமைத்து – ஆணையிடுதல் தொடர்பாக |
| பார்வை | சென்னை.6.தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.019420/அ4/இ3/2023 நாள்.09.05.2023 |

-----

பார்வையில் காணும் செயல்முறைகளில் பள்ளிகளில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின் வேலை நேரமானது காலை 10.00 மணி முதல் 05.45 மணி வரை உள்ளதால் பள்ளி வருகைப் பதிவேட்டை முடித்தல், ஆசிரியர்களின் விடுப்புகளை குறித்தல், பிற அலுவலகப் பணிகளை மேற்கொள்வதில் நிருவாக தொய்வு ஏற்படுவதாக தலைமை ஆசிரியர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளியின் அலுவலகப் பணிகளை மேற்கொள்ளவும், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் வேலை நேரம் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய அவசியம் மற்றும் தேவை எழுகிறது. மேலும், அரசுப் பள்ளிகளின் நிருவாக மேம்பாட்டிற்கு ஆசிரியரல்லாத அமைச்சுப் பணியாளர்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

எனவே, அரசுப் பள்ளிகளின் நிருவாகத்தை செவ்வனே மேற்கொள்ள ஏதுவாக நிருவாக நலன் கருதி, அமைச்சுப் பணியில் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்களான உதவியாளர் / இளநிலை உதவியாளர்களின் வேலை நேரமானது காலை 09.00 மணி முதல் 04.45 மணி வரை மாற்றியமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், கோடை விடுமுறை மற்றும் பள்ளி விடுமுறைக்

காலங்களில் ஆசிரியரல்லாத பணியாளர்களின் வேலை நேரமானது காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பள்ளிக் கல்வி ஆணையரின் ஆணையினை செயல்படுத்தமாறும் இச்செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறும் அரசு / நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்/– க.முனுசாமி)
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

தலைமை ஆசிரியர்,
அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.
1.கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
காந்தி நகர்,வேலூர்.6 – தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
2.மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக்கல்வி / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம் – தகவலுக்காகவும் அனுப்பலாகிறது.
3. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர்.